
Annual Subscription Rs. 80/-
Price Rs. 7/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 4 ஏப்ரல் 2009



## கிறிஸ்துவின் சபை

காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.
✆ 04257 - 230030, 230603 ;98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை .......... 1
2. ஏலகிரி முகாம் விளம்பரம் .......... 9
3. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் .......... 10
4. பெண்கள் பகுதி .......... 14
5. வாலிபர் பகுதி .......... 18
6. சிறுவர் பகுதி .......... 21
7. நீங்கள் பாராசூட்டை ஆயத்தம் செய்பவரா? .......... 23
8. விசுவாசத்தின் அடிப்படைகள் .......... 26
9. இரத்த சாட்சிகள் .......... 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 APRIL - 2009 Issue - 4


ஆசிரியர் உரை

## எல்லாம் நமக்காக

“எல்லாம் உனக்காக”, “எல்லாம் அவருக்காக”, “எல்லாம் உங்களுக்காக”, “எல்லாம் அவர்களுக்காக” என்று சிலர் கூறுவதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆம், எல்லாமே உனக்காக அல்லது உங்களுக்காக என்று குடும்பத்திலுள்ள பெற்றோரோ அல்லது சமுதாயத்தின் முன்னோடிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ கூறினாலும், உண்மையில் அவர்கள் யாருக்காக என்று கூறுகிறார்களோ அவர்களின் நன்மைக்காகவும், மேம்பாட்டுக்காகவும் பெரிதாக எதையும் செய்திருக்கமாட்டார்கள். ஆனாலும், வாயிலே அப்படிப் பந்தல் போடுவார்கள். இன்னும், சில நேரங்களில், “எல்லாம்” என்பதற்கான பொருள் என்னவென்றே தெரியாமல், ஏதோ, செய்து விட்ட ஒரு சில நன்மைகளினடிப்படையில் அப்படிச் சொல்ல எத்தனிப்பார்கள். எப்படியோ, யதார்த்தத்திற்கு மாறாகத்தான் பேசுவோம் அல்லது செய்வோம் என்று மனிதர்கள் துணிந்துவிட்ட பிறகு, அது பற்றிப் பேசி என்ன பயன் விளையப் போகிறது?

ஆனால், பரலோகத்தின் தேவன் தமது ஆவியானவரைக் கொண்டு “எல்லாம் உங்களுக்காக” என்று வேத வசனங்களில் வெளிப்படுத்தும் போது, மனிதர்கள் காரியத்தில் நாம் பாராமுகமாய் இருப்பது போல் அலட்சிய மனப்பான்மையோடு நடந்துவிடக் கூடாது. ஏனென்றால், அவர் பொய்யுரையாத தேவன். மனிதர்கள் போலல்லாமல் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்த பிறகு தான் “எல்லாம் உங்களுக்காக” அல்லது “எல்லாம் கிறிஸ்தவர்களுக்காக” என்று தமது தாசர்களைக் கொண்டு ஏவி எழுதிக் கொடுத்திருப்பார். சரிதானே.

"எல்லாம் கிறிஸ்தவர்களுக்காக" என்ற இச்சொற்றொடரைத் தன்னகத்தே கொண்டுள்ள தனித்துவம் கொண்ட எபிரெயர் நிருபம் பற்றி முதலில் கொஞ்சம் தெரிந்துகொள்ளுவோம். இந்நூலை யார் எழுதினது, எங்கிருந்து எழுதப்பட்டது போன்றவை ஏதோ காரணத்திற்காக ஆவியானவரால் நமக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், இந்நூலின் நோக்கம் பற்றி நமக்கு வெளிப்படுத்தப்படாமலில்லை. முதல் நூற்றாண்டுக் காலத்தில் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்ட போது, மோசேயின் பிரமாணத்தின் படி வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் பலர், கிறிஸ்துவின் புதிய பிரமாணத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். ஆனால், யூத மதத்தில் தீவிரத் தன்மை கொண்டவர்கள் கீழ்ப்படிந்து கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட சக யூதர்களை துன்பு றுத்தத் தொடங்கினர். இதில் அதிர்ந்து போன யூத கிறிஸ்தவர்கள், தங்கள் விசுவாச வீரத்தின் சாரத்தைக் குறைத்து, விட்டு வந்த மோசே யின் முறைமைகளுக்குத் திரும்பிச் செல்ல எண்ணம் கொண்டனர். அப்படிப்பட்ட ஓர் எக்கச்சக்க சூழ்நிலையில், நடக்கவிருந்த ஆவிக் குரிய விபரீதத்தை தடுத்து நிறுத்தும்படியாகவே இந்நூல் ஆவியான வரால் எழுதிக் கொடுக்கப்பட்டது.

ஆகவேதான், நீங்கள் திரும்பிச் செல்ல நினைக்கும் மோசேயின் முறைமை எந்த வகையிலும் கிறிஸ்துவின் முறைமைகளுக்கு மேலானது அல்ல என்ற உண்மை பலவழிகளில் நிலை நிறுத்தப் பட்டுள்ளது. அத்தோடு அப்படி நிலைநிறுத்துவதற்கு தேவையான ஆதாரங்களும் இவ்விதமாய் அடுக்கப்பட்டுள்ளது.

1. கிறிஸ்து, தேவதூதர்களைக் காட்டிலும் மேலானவர், ஏனெனில் தேவ தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்கிறவர்களாயிருக் கிறார்கள்.
2. கிறிஸ்து, மோசேயைக் காட்டிலும் மேலானவர், ஏனெனில், மோசே அவராலே படைக்கப்பட்டவர்.
3. கிறிஸ்துவின் ஆசாரியத்துவ முறை, ஆரோனுடையதைக் காட்டிலும் மேலானது, ஏனெனில், அது ஒரே தரம் செலுத்தப்பட்டது.
4. கிறிஸ்து, மோசேயின் பிரமாணத்தைக் காட்டிலும் மேலானவர், ஏனெனில், அவர் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக் கிறார்.

ஆக, மொத்தத்தில், கிறிஸ்துவிலும், கிறிஸ்தவத்திலும் நீங்கள் இழந்து போவதற்கு ஒன்றுமேயில்லை என்று எபிரெயர் நிருபம் யூத கிறிஸ்தவர்களுக்கு எடுத்து விளக்கி எச்சரிக்கிறது.

இப்படிப்பட்ட இந்நூலின் 9 ம் அதிகாரத்தில் தான் நமது தலைப்புக்கான இக்கருத்து இடம் பெற்றுள்ளது. குறிப்பாக, புதிய பிரமாணத்தின் பலி பற்றி பேசும் இவ்வதிகாரத்தின் இரண்டாம் பகுதியில் (9:12-28) இது பற்றிப் பேசப் பட்டிருக்கிறது. ஆம், 24 ம் வசனம், இயேசு, இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி *பிரவேசித்திருக்கிறார்* என்றும், வசனம் 26, இயேசு, பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்த கடைசி காலத்தில் ஒரே தரம் *வெளிப்பட்டார்* என்றும், மேலும், வசனம் 28, இயேசு,

தமக்காக காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் *தரிசனமாவார்* என்றும் கூறுகிறது. பிரவேசித்திருக்கிறார், வெளிப்பட்டார், தரிசனமாவார் என்ற இம்மூன்று வார்த்தைகளும், இயேசு கடந்த காலத்தில் மனுக்குலத்துக்காகச் செய்தது, இயேசு தற்காலத்தில் கிறிஸ்தவர்களுக்காகச் செய்து கொண்டிருப்பது மற்றும் இயேசு எதிர்காலத்தில் அவர்களுடையவர்களுக்காகச் செய்யப்போவது என மூன்று காலங்களையும் சம்பந்தப்படுத்தி பேசுகிறதாக உள்ளது. மொத்தத்தில், இயேசுவின் கடந்த காலமும் மனிதர்களுக்காக, இயேசுவின் நிகழ்காலமும் மனிதர்களுக்காக, இயேசுவின் எதிர்காலமும் மனிதர்களுக்காக என்ற பேருண்மை அழகாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சரி, இப்படி மூன்று காலங்களிலும் இயேசு மனுக்குலத்துக்கு எப்படி நன்மை செய்து கொண்டிருக்கிறார் என்று இப்பொழுது தெரிந்து கொள்ளுவோம். அதை நாம், 9-ம் அதிகார வசனத்தின் வரிசையில் பார்க்காமல், எழுதப்பட்டிருக்கும் கால வரிசையின் படியாகப் பார்த்துப் பயனடைவோம்.

## I. நமக்காக வெளிப்பட்டார்

“எல்லாம் நமக்காக” என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், இயேசுவானவர் கடந்த காலத்தில் வெளிப்பட்டது மனிதர்களாகிய நம்மை இரட்சிக்கும்படியாகத் தான் என்பது.

பரலோக வாசியான இயேசுவானவர், சரீரத்தில் வெளிப்படுவார் என்று முந்நூறுக்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கிறது. இயேசு பிறப்பதற்கு முன்பாக, தனக்காக நியமிக்கப்பட்டிருந்த கன்னி மரியாளினிமித்தம் ஐயப்பாடோடிருந்த நீதிமானாகிய யோசேப்பிடம், கர்த்தருடைய தூதன் தோன்றி, “ஐயப்படாதே” என்று சொன்னதோடு *அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்* என்றும் சொன்னார். (மத் 1:21) பிறகு, இயேசு பிறந்து ஊழியம் செய்ய ஆரம்பித்த நாட்களில், யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு; *இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி* என்றார். (யோவா 1:29) இன்னும், லூக்கா நற்செய்தியாளரும் இயேசு வந்ததின் நோக்கத்தை இவ்விதம் கூறுகிறார். *இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்* என்று. (லூக் 19:10) இந்த வசனங்கள் எல்லாம் இயேசு எதற்காக வெளிப்பட்டார் என்று துல்லியமாகவே கூறுகிறது.

எபிரெய ஆசிரியர், இயேசு வெளிப்பட்டதன் மூலம் மனிதர்களுக்கு கிடைத்த பாக்கியம் பற்றி, ஆதலால், அவர் தேவ தூதருக்கு உதவியாகக் கைக்கொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாக கைகொடுத்தார். (எபி 2:16) என்று உரக்கக் கூறுகிறார். பேதுரு அப்போஸ்தலன், இன்னும் கூட ஒருபடி மேலே சென்று ஆவியின் ஏவுதலால், மனிதர்களுக்கு இயேசுவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பின் திட்டத்தை உற்றுப்பார்க்கத் *தேவதூதரும் ஆசையாயிருந்தார்கள்.* (1பேது 1:12) என்று வியந்து கூறுகிறார். ஏனென்றால், தேவ தூதர்கள்

பாவம் செய்த போது மீட்பின் திட்டத்தை தேவன் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின், நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். (யூதா 6) இதிலிருந்து தெரிவது என்ன? தேவாதி தேவன் தேவதூதர்களைக் காட்டிலும் மனிதர்களை அதிகம் நேசிக்கிறார் என்பது எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி தெரிகிறது.

சரி, இப்படி இயேசு நமக்காகவே வெளிப்பட்டிருக்கும் போது, அவர் வெளிப்பட்டதின் நோக்கத்தை நாம் புரிந்து, அவர் வெளிப்பட்டதின் மூலம் மனிதர்களாகிய நாம் அடைய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படும் ஆவிக்குரிய நன்மைகளை நாம் அடைந்து விட்டோமா? தேவதூதர்களைக் காட்டிலும் தேவன் நம்மை அதிகமாக நேசித்திருக்கும் போது அந்த நேசத்தை நாம் அற்பமாக எண்ணலாமா? மனுக்குலத்தின் மீது தேவன் கொண்ட உயர்ந்தபட்ச நேசத்தின் வெளிப்பாடாகத்தானே, பரலோகத்தின் மிகச்சிறந்த கொடையாகிய இயேசுவை தேவன் ஈவாக அனுப்பித் தந்தார். (யோவா 3:16) அந்த தேவ குமாரனும், தன்னுடைய நேசத்தை நம்மிடத்தில் வெளிப்படுத்தும் பொருட்டு தன்னையே பலியாகத் தந்தார் தானே. இயேசுவின் அன்பு குறித்து அப்போஸ்தலன் பவுலடியார் எபேசியருக்கு எப்படிக் கூறுகிறார் என்று பாருங்கள். *கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்* (எபே 5:2) என்று.

அப்படியானால், அருமையானவர்களே, நம்முடைய நிலை என்ன? பாவங்களை இரட்சிக்க இயேசு வந்தது உண்மையானால், நாம் பாவத் திலிருந்து இரட்சிப்படைந்து விட்டோமா?..... இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவா 1:7) இயேசுவின் வல்லமையுள்ள இரத்தத்திற்குக் கட்டுப்படாத பாவம் என்று எந்தவொரு பாவமுமில்லை. ஆகையால், பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்த ஏராளமான ஜனங்களின், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு, பேதுரு அப்போஸ்தலன் சொன்ன பதில் போல நாம் *மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவோம்....*(அப் 2:38) நமக்காக வந்த இயேசுவை நம்முடைய வாழ்க்கையில் ஏற்றுத் தரித்துக் கொள்வதற்கு இது தான் வழி. இது குறித்து பவுலடியார், ஏனெனில், உங்களில் *கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே* (கலா 3:27) என்கிறார்.

ஆகையால், நமக்காக வெளிப்பட்ட இயேசுவை அவருடைய போதனையின் படியாக நம் வாழ்வில் ஏற்று, அவர் வெளிப்பட்டதின் நோக்கத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற நம்முடைய பங்களிப்பை குறைவில்லாமல் செய்வோம்.

## II. நமக்காகப் பிரவேசித்திருக்கிறார் (எபி 9:24) :

எல்லாம் நமக்காக என்ற தலைப்பிலிருந்து நமக்கு கிடைக்கும் இரண்டாம் பாடம், இயேசுவானவர் மரணத்தை வென்று பரலோகத்தில் பிரவேசித்து கிறிஸ்தவர்களுக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பது.

இந்த இடத்தில் ஒரு காரியத்தை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். இயேசு பூமிக்கு வந்தது மானிடம் முழுமைக்குமாகத் தான். இதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், அவர் பரலோகில் பிரவேசித்திருப்பதோ மனிதர்கள் அனைவருக்காகவும் அல்ல. இந்த சிலாக்கியம் யாரெல்லாம் கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து வாழ்கிறார்களோ அவர்களுக்காகத்தான். எபிரெயர் ஆசிரியர் **நமக்காக** என்று பயன்படுத்தியிருக்கும் வார்த்தையின் பொருள் ***புதிய ஏற்பாட்டு சத்தியத்தின்படியான கிறிஸ்தவர்களுக்காக என்பது தான்.*** மற்றபடி, அவ்வார்த்தை, எல்லா மனுக்குலத்தையோ அல்லது பல கூறுகளாகப் பிரிந்து கிடக்கும் ஒட்டு மொத்த கிறிஸ்தவ சமுதாயத்தையோ குறிக்கும் வார்த்தை அல்ல. உலகத்தின் பார்வையில், கிறிஸ்தவர்கள் என்ற அங்கீகாரத்தை பெற்றிருப்பவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப் பார்வையில் கிறிஸ்தவர்கள் என்று அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சரி, மரணத்தை வென்று மூன்றாம் நாளில் உயிரோடெழுந்த இயேசுவானவர் இப்போது எங்கே இருக்கிறார்? ***பிதாவினுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.*** (எபி 12:2) இப்படி தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசுவானவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார் என்ற முழு விவரமும் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், ஒரு காரியத்தை அவர் செய்து கொண்டிருக்கிறார் என்பது மாத்திரம் திட்டமாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்ன? யோவான் அப்போஸ்தலன் அது என்ன என்று நமக்குச் சொல்லுகிறார். என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற **இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்.** (1யோ 2:1) யோவான் மாத்திரமல்ல, பவுல் அப்போஸ்தலனும். ரோமாபுரியாருக்கு எழுதும் போது, இவ்விதமாகவே கூறியுள்ளார். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்: அவரே எழுந்துமிருக்கிறவர்; **அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.** (ரோம 8:34).

உயிரோடெழுந்த இயேசுவானவர் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து, அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி கிறிஸ்தவர்களாக வாழ்கிறவர்களின் பெலவீனங்களில் உதவி செய்வதற்காக (எபி.4:14-15) பிதாவினிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். மெய்க் கிறிஸ்தவர்களுக்காகப் பரிந்து பேசும் வேலையை இயேசு ஆண்டவர் இலவசமாகச் செய்து கொண்டிருக்கிறார். நம்முடைய பிரச்சனைகளுக்காக இலவசமாக வாதாட ஒருவரை இப்பூமியில் நாம் கண்டுபிடிக்க முடியுமா? அழிந்து போகும் சொத்து சுகத்திற்காக வாதாடுவதற்கே இலவசமாக ஆள் கிடைக்காத போது, நித்திய சுகத்திற்காகவும், நித்திய வாழ்வுக்காகவும் அவர் இலவசமாக வாதாடிக் கொண்டிருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று எண்ணிப்பாருங்கள்! அப்பொழுது தான் அவர் கிறிஸ்தவர்களுக்காகச் செய்து கொண்டிருக்கும் வேலையின் மகத்துவம் புரியும்.

அருமையானவர்களே, கிறிஸ்துவின் இந்தப் பரிந்து பேசுதல், அவருடைய உபதேசத்தின்படி, நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறவர்களுக்குத்தான். எல்லா மனுக்குலத்துக்குமோ அல்லது கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற அனைவருக்குமோ அல்ல, நிச்சயமாக அல்ல. நீங்கள், ஒருவேளை, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு இதுகாறும் கீழ்ப்படியாமலும், அதன் மூலம் கிறிஸ்துவால், அவருடைய ஒன்றான மெய்ச்சபையில் (எபே 4:4). கிறிஸ்துவால் சேர்க்கப்படாமலும் இருந்தால் (அப் 2:47) நீங்கள் இப்பொழுதே கீழ்ப்படிந்து கிறிஸ்து இயேசுவை உங்களுக்காகப் பரிந்து பேசுகிறவராக இலவசமாகப் பெற்றுக்கொள்ள உங்களை ஊக்கப்படுத்துகிறேன். கிறிஸ்து நம்முடைய நித்திய வாழ்வுக்காகப் பரிந்து பேசுகிறவராக இருந்தால், பரலோக வாழ்வுக்கான பாக்கியம் நமக்கு மிகப் பிரகாசமாக இருக்கும்.

### III. நமக்காகத் தரிசனமாவார் (வ. 28) :

எல்லாம் நமக்காக என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து பரிந்து பேசிக் கொண்டிருப்பவர், அவருடையவர்களுக்காக மீண்டும் தரிசனமாவார் என்பது.

எபிரெயர் ஆசிரியர், 9:28 ல் சொல்லுவதை நன்றாகக் கவனியுங்கள். கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி *இரண்டாந்தரம் பாவமில்லாமல் **தரிசனமாவார்.*** இவ்வசனத்தில் இரண்டு காரியங்களை நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவது, ஆவியானவர், கிறிஸ்து இரண்டாந்தரம் வருவார் என்று சொல்லாமல், தரிசனமாவார் என்று கூறுகிறார். தரிசனமாவார் என்பதற்கும், வருவார் என்பதற்கும் பெருத்த வேறுபாடுண்டு. இயேசு,

இரண்டாம் தரம் தரிசனமாவாரேயொழிய, அநேகர் நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டுமிருப்பது போல இரண்டாம் தரம் பூமிக்கு வரமாட்டார். பூமியில் ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கமாட்டார். ஏனெனில், ஏற்கனவே சபையாகிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து விட்டார். (கொலோ 1:13)

இயேசு ஆண்டவர் பூமிக்கு மீண்டும் வரப்போவதில்லை என்பதைத் திட்டப்படுத்திக் கெள்ள பவுலடியார் தெசலோனிக்கே யருக்கு எழுதின முதலாம் நிருபத்திற்கு உங்களை அழைக்கிறேன். ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் (1 தெச 4:16, 17). இயேசு இரண்டாம் தரம் பூமிக்கு வருவதாக இருந்தால், எதற்காக அவர் வருகையில் மெய்க்கிறிஸ்தவர்கள் அவருக்கு எதிர் கொண்டு போக வேண்டும்? எதற்காக, மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள் ளப்பட வேண்டும்? சிந்திப்போம். உபதேசத்திற்கு மாறான வழியில் நாம் நடக்கவோ அல்லது நடத்தப்படவோ வேண்டாம்.

இரண்டாவதாக, எபிரெய ஆசிரியர் 9:28 ல் கிறிஸ்துவானவர், தமக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும் படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் என்று கூறுகிறார். நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். முதல் தரம் இயேசுவானவர் வந்தது, மனுக்குலம் முழுமைக்குமாக. ஆனால், இரண்டாம் தரம் தரிசனமாவது, தமக்காக காத்துக் கொண்டிருப்பவர்களுக்காக. அப்படி யானால் யார் அவருக்காக காத்துக்கொண்டிருக்கிறவர்கள்? பவுலடியார், பிலிப்பி பட்டணத்து சபைக்கு நிருபம் எழுதும்போது, நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்றும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலி 3:20) என்கிறார். அங்கே அந்த பட்டணத்தார் முழுவதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுது கிறாரா அல்லது அங்குள்ள கிறிஸ்துவின் சபையார் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக எழுதியுள்ளாரா? இதற்கான பதில், அவர் இந்நிருபத்தை எப்படி ஆரம்பிக்கிறார் என்பதிலிருந்து புரியும். இயேசு கிறிஸ்துவின் ஊழியகாரராகிய பவுலும், தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான் கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது என்று ஆரம்பிக்கிறார் அப்படியானால், கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் யார்? கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்களாகிய கிறிஸ்துவின் சபையார் தான். மற்றவர்களுக்கு இதிலே பங்கில்லை.

இப்பொழுது சொல்லுங்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவானாயிருந்து கிறிஸ்து இரண்டாம் தரம் வெளிப்பட எதிர் பார்த்துக் கொண்டிருப்பவராக உள்ளீர்களா? அல்லது ஒப்புக்கு கிறிஸ்தவன் என்ற பதத்தோடு தொடர்புடைய உப்புச் சப்பற்ற ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளீர்கள்? பிலிப்பு பட்டணத்தார் போன்று ஞானஸ்நானத்தின் மூலம் பாவ மன்னிப்பு பெற்று (அப் 22:16) பரிசுத்தமாக்கப்பட்ட நிலைமையிலிருந்து அவர் களைப் போன்று காத்துக் கொண்டிருப்பவர்களை இரட்சிக்கும்படி யாகத்தான் அவர் இரண்டாம்தரம் தரிசனமாகப் போகிறார். தயவு செய்து ஏனோ தானோ என்றிருந்து ஏமாந்து போக வேண்டாம். அப்படியானால், ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக வருவது எப்படி? இதற்கான பதில், கலா 3:27ல் இடம் பெற்றுள்ளது. ஏனெனில், உங்களில் *கிறிஸ்துவுக்குள்ளாக* ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டீர் களே என்றுள்ளது. கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் என்றால் என்ன பொருள்? ***ஞானஸ்நானம் தான் ஒருவனைக் கிறிஸ்துவுக் குள்ளாக்குகிறது.*** மற்றபடி, செலுத்தும் சந்தாவோ, பெற்றுக் கொள்ளும் பாவமன்னிப்புச் சீட்டோ, கடைப்பிடிக்கப்படும் சடங்காச் சாரங்களோ, அல்லது கைக்கொள்ளப்படும் பாரம்பரியங்களோ இன்னும் வேறு காரியங்களோ ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாக்காது.

ஆகையால், அவர் இரண்டாம் தரம் தரிசனமாகும்போது அவராலே நித்திய இரட்சிப்புக்கு நாம் தகுதியுள்ளவர்களாகக் காணப் படும்படி, பாவமன்னிப்புக்கென்றே ஞானஸ்நானம் பெற்று (அப் 22:16) கிறிஸ்துவின் ராஜ்ஜியமாகிய சபையில் உண்மையுள்ளவர் களாய் நிலைத்திருக்கப் பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

## ஏலகிரி முகாமுக்கு உங்களை எதிர்பார்க்கிறேன்

**எ**திர் வரும் **மே மாதம் 4,5,6 - 2009** ஆகிய தேதிகளில் நடைபெறும் **12-ம் வேனிற்கால வேதாகம முகாம்** கலந்து கொள்வோரின் ஆவிக்குரிய மேம்பாட்டுக்காகவும், சரீர நன்மைகளுக்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

“திருமறை ஆசான்” வாசகர்களாகிய நீங்கள் ஒவ்வொரு வரும் இந்த ஆவிக்குரிய விருந்தில் பங்கு கொண்டு ஆத்தும இரட்சிப்பு பெற்று, பக்தியில் விருத்தியடைந்து, பரலோக பாக்கியத்துக்குப் பங்காளிகளாகும்படி விரும்பி ஜெபத்தோடு அழைக்கிறேன். வாருங்கள்! **- ஆசிரியர்.**

*ஜெபியுங்கள் !* *பங்கு பெறுங்கள் !!*

# பன்னிரண்டாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை தியானம் நேயர்கள் &
## திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 4, 5,6 - 2009 (திங், செவ், புதன்)**

### சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 100 /- சிறியவர்கள் ரூ. 60 /-**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம்

"எல்லோரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" என வேதாகமம் கற்பிக்கிறது. (ரோமர் 3:23), தேவனை விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, தண்ணீரில் திருமுழுக்கு பெறும் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்றும் அது கூறுகிறது. (மாற்கு 16:16; அப். 2:38) இவற்றிற்கு மாறாக நடப்பவர்கள், சந்தேகமின்றி, மன்னிக்கப்படமாட்டார்கள். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் வேத வசனங்கள் வழங்கப்பட்டது. எனவே, ஆவியின் வார்த்தையோடு நாம் தொடர்பு கொள்ளும்போது, நாம் மனிதரோடு அல்ல, அப்போஸ்தலர்களோடு கூட அல்ல, தேவனுடைய இறுதி வெளிப்படுத்தலை நமக்குத் தந்தவரோடு நாம் தொடர்பு கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவரை எந்தக் கண்ணோட்டத்தில் நாம் பார்க்கிறோம், அவரைப் பற்றி நமது மனோநிலை யாது, அவரை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா அல்லது புறக்கணிக்கிறோமா என்பதைப் பொறுத்தே பல காரியங்கள் சார்ந்துள்ளன.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தைப் பற்றி வசனங்கள் கூறுகிறது. அவருக்கு விரோதமான பாவத்தை செய்கிறவர்களுக்கு இவ்வுலகில் மட்டுமின்றி, வரப்போகிற உலகத்திலும் மன்னிப்புக் கிடையாது என்றும் அது கூறுகிறது. கிறிஸ்து கூறினார் : "ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப் பாவமும் எந்த தூஷணமும் மனிதருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனித குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை". (மத்தேயு 12:31, 32). இதே போன்ற அறிவிப்பை மாற்கு 3:28, 29 வசனங்களில் மாற்குவும் வெளியிடுகிறார்..

இன்னும் இது போன்ற வேறு வசனங்களும் வேதாகமத்தில் காணப்படுகிறது. உதாரணமாக, மரணத்துக்குகேதுவான ஒரு பாவத்தைப் பற்றி யோவான் பேசினார். அதாவது, "மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவம் உண்டு. அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன். அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு". (1 யோவான் 5:16,17).

"ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" (1தெச. 5:19) என பவுல் அறிவித்தார். எபிரேய எழுத்தர் கூறினார் ; ஏனெனில், ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுபிக்கிறது கூடாத காரியம். (எபி. 6: 4-6).

மீண்டுமாக, எபிரேய எழுத்தர் சொல்லுகிறார் : "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்கவேறொரு பலி இனியிராமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடி தான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள். பழி வாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் தம்மு டைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே". (எபிரேயர் 10:26-31).

பேதுரு எழுதினார் : "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுக் கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப் பட்டால், அவர்களுடைய பின்னிலைமை, முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது". (2 பேதுரு 2:20-22).

இப்போது, மேற்குறிப்பிட்ட எல்லா வசனங்களிலும் சில ஒற்றுமைகளை நாம் காண முடியும் என நான் நினைக்கிறேன். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம், மரணத்துக்கு ஏதுவான பாவம், ஆவியை அவித்துப் போடுதல், தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைதல், அறிந்து பாவஞ் செய்தல், உலக ஆசாபாசங்களிலே திரும்பிச் சென்று மூழ்கிப் போதல், ஆகியவைகளைக் காண்

கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், தேவனுடைய பரிசுத்த ஆவியைப் புறக்கணிப்பதுவே, பரிசுத்த ஆவிக்கு விரோதமான தேவ தூஷணமும், அல்லது பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமும், மரணத்துக்கு ஏதுவான பாவமும் ஆகும். அனனியா, சப்பீராள் என்பவர்கள் பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் சொல்லி, அந்தப் பாவத்தின் காரணமாக உடனே அதே இடத்தில் அவர்கள் செத்து விழுந்ததை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமானது. (அப். 5).

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்த வந்தார். ஒருவன் ஆவியைப் புறக்கணிக்கும்போது, அதாவது ஆவியினுடைய வார்த்தையையும், ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்து செய்த தியாகச் செயலையும் நிராகரிக்கும்போது, பின்னர் ஒருவன் இரட்சிக்கப்பட வேறு வழி எதுவும் கிடையாது. அப்படிப்பட்ட நிலையில் அவரை அடைய எந்த வழியும் இல்லை. இந்த உலகத்தில் பலர் இப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றனர். உண்மையிலேயே இது மிகவும் வருத்தமளிக்கும் செயல்களில் ஒன்றாகும். நானும், நீங்களும் எதைச் செய்த போதிலும், பரிசுத்த ஆவியானவரையும், கிறிஸ்துவைப் பற்றிய அவருடைய வெளிப்படுத்துதலையும், அவர் மூலமாகக் கிடைக்கக் கூடிய இரட்சிப்பையும் புறக்கணிக்கும் அளவுக்கு நாம் ஒருபோதும் செல்லக்கூடாது.

மனிதன் செய்யும் எந்தப் பாவமும் மோசமானதே. ஏனெனில், இறுதியில் அது அவனை இழந்து போகச் செய்கிறது. தேவனுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தாமல் இவ்வுலகை விட்டுச் செல்லக் கூடாது என அவன் நினைக்கலாம். என்றாலும் மனஸ்தாபப்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்படையும் செயலைத் தள்ளிப் போட்டுக் கொண்டே செல்லும்போது, அவன் வீழ்ந்து போகக் கூடும். ஆனால் ஒருவன் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, கர்த்தரை விசுவாசித்து, அவனது பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் அவனுடைய விசுவாசத்தை அறிக்கை செய்து, தனது பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் திருமுழுக்குப் பெற விரும்பினால், அவன் இரட்சிப்பு அடையக் கூடும்.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தை எது உண்டாக்குகிறது என்பது பற்றி, தங்கள் விருப்பம் போல சிலர் முடிவுக்கு வந்துள்ளனர். அதாவது, அப்படிப்பட்ட ஒரு பாவத்தை ஒருவனோ அல்லது ஒருவளோ செய்துவிட்டால், அதன் பின்பு அப்பாவத்திலிருந்து மனந்திருந்தி தேவனுக்கு கீழ்ப்படிய விரும்பினாலும், அது முடியாது என்று சிலர் கருதுகின்றனர். நிச்சயமாக இது உண்மையல்ல. கிறிஸ்துவை சிலுவையிலே அறைந்தவர்களில் கூட சிலர் பெந்தகொஸ்தே நாளிலே தேவனுக்குக் கீழ்படிந்து இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களே இரட்சிக்கப்பட்டது உண்மையாக இருக்கும் போது, நாம் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் நானும் நீங்களும் இரட்சிக்கப்படுவது எப்படி முடியாத காரியமாகும்?.

சபையை தான் துன்புறுத்திய காலத்தை பவுல் நினைவு கூறுகிறார். அது அவரை வாட்டுகிறது. பாவியில் மாபாவி என தன்னைத்தானே குறிப்பிடுகிறார். இருந்தபோதிலும் அவர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார். அவருடைய பாவங்கள் கழுவப்பட்டன. கர்த்தரின் மிகப்பெரிய ஒரு ஊழியனாக அவர் மாறினார். (அப் 8,9,22 அதிகாரங்கள், 1தீமோ. 1:15). தனது ஆரம்ப நாட்களில், கர்த்தருக்கு விரோதமான பல காரியங்களைச் செய்தவராகிய பவுல், தனது பாவங்களுக்கு மன்னிப்பு அடைந்திருப்பாரேயாகில், தங்களை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும் யார் வேண்டுமானாலும் இன்று நிச்சயமாக இரட்சிப்படைய முடியும்.

ஒருவன் செய்த பாவங்களுக்காகக் கவலைப்படாமல், பாவங்களுடன் மரணமடைந்து போனால், அவன் வீழ்ந்து போனவனாகிறான். அவனுக்கு இரண்டாவது சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றோ, அல்லது உறவினர்களும் நண்பர்களும் ஜெபம் செய்து, வீழ்ந்த நிலையிலிருந்து அவனைக் காப்பாற்றி, இறுதியில் அவனை இரட்சிப்படைய வைக்க முடியும் என்றோ வேதம் எங்கும் கற்பிக்கிறதில்லை. மாறாக, தேவனை சந்திக்க நீ ஆயத்தமாக வேண்டிய நேரம் இதுவே என்றுதான் வேதாகமம் கூறுகிறது. (2கொரி 6:2; எபி, 9:27).

முடிவாக, தேவனுடைய பரிசுத்த ஆவியானவரையும், உலகத்திற்கு அவர் கொண்டு வந்திருக்கிற வார்த்தையையும் புறக்கணிக்க வேண்டாம். அவரை மறுதலிக்காதே, எதிர்காதே, வெறுக்காதே. அவ்வாறு இரட்சிப்பையும் பற்றிய அவருடைய வசனத்தைக் கேட்கும் நிலைக்கு நீ திரும்புவது மிகவும் கடினமாகும்.

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள ஆவியின் வெளிப்படுத்தல்களை ஏற்றுக்கொள்ள உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன். கிறிஸ்து கூறினார் :...வாருங்கள். "... என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்..." (மத் 11:28 -30). மீண்டுமாக நாம் படிக்கிறோம் : ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி 22:17) நிச்சயமாக, அவரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிய அது உங்களை வழிநடத்தும். அவருக்குக் கீழ்ப்படியும் சகலரையும் அவர் இரட்சித்து, நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை அளிக்கிறார்.

**J.C. சோட்**

## இரண்டுமே தோட்டத்தில்தான்

பாவத்தின் ஆரம்பம் – ஏதேன் தோட்டம்

பாவ விமோசனத்தின் ஆரம்பம் – கெத்சமனே தோட்டம்

பெண்கள் பகுதி

# நான் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

கிறிஸ்துவுக்குள் அன்பும், பிரியமுமான சகோதரிகளே! இம்மாதமும் நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளை ஆராய்ந்து கொள்ள அவர் கொடுத்த சிலாக்கியத்துக்காக கோடான கோடி நன்றிகளை ஏறெடுத்துக் கொள்வோம்.

ஏசாயா 6:8 ல், பின்பு, யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான், இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன் என்ற வசனப் பகுதியை வாசிக்கிறோம். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் அவருக்காக பற்பல முக்கியமான வேலைகளைச் செய்வதற்காக சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவன், இதைச் செய், அதைச் செய் என்று நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். ஆனால், நாமாக வலிய முன் வந்து, ஏசாயாவைப் போல, இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்று சொல்லி வேலை செய்யும் மனப்பாங்கைப் பெற்றிருக்கிறோமா என்று நம்மிடம் எதிர்பார்க்கிறார். தேவனுடைய ராஜ்ஜியமாகிய சபையிலே நம் எல்லோரும் செய்யக்கூடிய வேலைகள் நிறைய உள்ளன. ஒரு வேளை திறமைகளில் ஒருவருக்கொருவர் மாறுபட்டிருந்தாலும் நாம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேலைகள் நிறையவே உள்ளது. தேவையானது என்னவென்றால், செய்ய வேண்டும் என்ற விருப்பம் நமக்குள் இருக்க வேண்டும்.

சரி, நாம் செய்யவேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதில் முதலாவது காரியம், ***ஆவிக்குரிய காரியங்களில் ஒரு வளர்ச்சி.***

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, ஏதோ இது பெண்களுக்கான வேலையாக இல்லையே என்று நினைக்கத் தோன்றலாம். அநேக சமயங்களில், அடுத்தவர்களின் தேவைகளில் மிகவும் கவனமாக உதவி செய்துவிட்டு நம்முடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் அலட்சியம் செய்து விடுகிறோம். பெண்களின் வேலை ஒருபோதும் செய்து முடிக்கப்படாதது என்று சொல்வது உண்மைதான். சுத்தம் செய்வது, துணிகளை பாதுகாப்பது, உணவுப் பொருள் வாங்குவது, சமைப்பது, கணவன், பிள்ளைகள் என்று கவனம் முழுவதும் அவர்களுக்காகச் செலுத்துவது என்று நேரத்தை செலவு செய்து விட்டு, நமக்காக வேதம் வாசித்து, ஜெபம் பண்ணி, வசனத்தை தியானிப்பது போன்ற மிக முக்கியமான காரியங்களுக்கு நேரமும் இருக்காது, பெலனும் இருக்காது. இப்பேர்ப்பட்ட நேரங்களில் தான்

நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்ற கேள்வி எழுகிறது. இது நியாயமான ஒன்றுதான்.

நியாயமும், நீதியும் தேவனுக்கே சொந்தமான ஒன்றாக இருப்பதால் இதைக் குறித்து அவர் என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்று பார்ப்போம். நாம் அனைவரும் அறிந்திருக்கும் மார்த்தாள், மரியாள் சம்பவத்தில் (லூக்கா 10:38 42) மார்த்தாள் இயேசுவைத்தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவள் சகோதரி மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தை கேட்டுக் கொண்டிருந்தாள். இயேசு மார்த்தாளைப் பார்த்து, மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே; மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று சொல்கிறார். அப்படியானால் யாரையுமே வீட்டிலே ஏற்றுக் கொண்டு அவர்களுடைய தேவைகளை சந்திக்கக் கூடாது என்பது அர்த்தமா? கட்டாயமாக இல்லை. ஏனென்றால் மத்: 20:27 ல் உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் என்று நமதாண்டவரும், அருமை இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். காரியம் என்னவென்றால, சரீரத் தேவைகளுக்காகவே நம் முழு நேரத்தையும் செலவு செய்துவிட்டு ஆவிக்குரிய காரியங்களை அப்படியே ஒதுக்கிவிடுகிறோம். வீடு, வாகனம், ஆடைகள், பூமிக்குரிய சொத்து இவையெல்லாம் நம்மை விட்டு கடந்து சென்று விடும். ஆனால், நம்முடைய ஆத்துமாவும், மற்றவர்களின் ஆத்துமாவும் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். (மத் 6 :33).

நாம் எப்படி ஆவிக்குரிய ரீதியிலே வளர்வது? நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசன மாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு : 2 : 3) அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கேயர்களுக்கு எழுதுகிற போது உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும் (1 தெச 1:3) என்று பாராட்டுகிறார். இதைப் பற்றி பேதுரு ஆசிரியர் இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும் அவரை அறிகிற அறிவினா லும் வளருங்கள். (2 பேதுரு 3:18) என்று கூறுகிறார். நம் சரீரம் வளர்ந்து, முதிர்ச்சியடைந்து பின்பு தேய்ந்து விடுகிறது. ஆவிக்குரிய வளர்ச்சி என்பது தொடர்ந்து தொடரக்கூடிய ஒன்று. பவுல் கொரிந்து பட்டணத் தில் உள்ள கிறிஸ்துவின் சபை விசுவாசிகளுக்கு கூறும் போது ஆன படியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது என்கிறார். (2 கொரி 4 : 16). ஆகவே, வளர்ச்சி அவசியம்.

இரண்டாவதாக தேவன் நாம் கற்றுக்கொடுப்பவராக (ஆசிரியர்) இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

நம் முன்னுதாரணத்தின் மூலமோ அல்லது நம் வாழ்க்கையின் மூலமோ நாம் அனைவரும் ஓர் ஆசிரியையாகவே இருக்கிறோம். மனைவிகளாகிய நாம் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடத்தையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். (1 பேதுரு 3 : 1 2) என்று வாசிக்கிறோம். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது என்று இயேசு கிறிஸ்து மத் : 5 : 16 ல் கூறுகிறார். ஒருவேளை நம் வாழ்க்கையைப் பார்த்து சுவிசேஷத்திற்கு ஒருவர் கீழ்ப்படிந்தாலும், தேவனுடைய வார்த்தையே தெளிவையும், இரட்சிப்பையும் கொடுக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷமே அதை விசுவாசிக்கிற யாருக்கும் இரட்சிப்பு உண்டாக தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16) என்று வாசிக்கிறோம்.

கற்றுக் கொடுக்கிற வேலை அவ்வளவு முக்கியமானதா என்றால், ஆம் முக்கியமானது தான். ஏனென்றால், முதலாவதாக போதிக்க வேண்டுமென்பது தேவனுடைய கட்டளை. உலகமெங்கும் போய் போதிக்க வேண்டும் என்று சீடர்களுக்கு கட்டளையாக கொடுத்திருக்கிறார். (மத்:28:18 20). எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே. ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான். (யோவா:6:45). நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்...(1 கொரி 3:910). என்று வாசிக்கிறோம். அப்.பவுல் தீத்துவுக்கு எழுதும் போது, முதிர் வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு போதிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (தீந்து : 2 : 3,5) என்று எழுதியிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டிலும் பார்க்கும்போது போதித்தல் பற்றிய காரியங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உபா : 4 :9; 6:7,9). வசனங்களை வாசித்துப் பார்க்கும்படியாய் அன்போடு உங்களை கேட்டுக் கொள்கிறேன். இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்திலே போதிக்கும் போது கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவன், பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னைப்படுவான் (மத். 5:19) என்று மிகவும் அழகாக, சரியாக சொல்லியிருக்கிறார். வளர்ச்சியின் ஓர் அடையாளம் போதனை. நம்மில் அநேகர் ஆவிக்குரிய வாழ்வில் பல வருடங்களை கழித்திருந்தாலும் இன்னும் பிறருக்கு கற்றுக் கொடுப்பதில் தயக்கம் காட்டுகிறோம். இதையே ஆவியானவர் எபிரெயர்

ஆசிரியர் மூலமாக கூறும்போது, காலத்தைப் பார்த்தால், *போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல; பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள்.* (எபி. 5 : 12) என்கிறார். எந்த வகுப்பாக இருந்தாலும் ஓர் ஆசிரியர் தான் மிக அதிகமாக கற்றுக் கொள்கிறார்.

ஒருவர் கற்றுக் கொடுக்கும் வேலையை செய்யும்போது அது அவரை அதிகமாக கற்க தூண்டுவதோடு, படிப்பதற்கு சரியான நோக்கத்தையும் கொடுக்கத் தூண்டுகிறது.

ஆக, அருமையான சகோதரிகளே, தேவன் இம்மாதம் நம்மிடம் விரும்பும் இரண்டு காரியங்களான ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் பிறருக்கு கற்றுக் கொடுப்பது பற்றி வேத வசனங்களின் துணை கொண்டு பார்த்தோம். நாம் இந்த இரண்டு காரியங்களையும் செய்து தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவோம். எப்படி செய்வது என்று வேத வசனங்கள் நமக்கு போதிக்கிறது. அதை படித்து, ஜெபித்து, தியானித்து நான் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்டு, வசனம் சொல்கிறபடி செயல்படுவோம். தேவன் அதற்கு உதவி செய்வார்!! ஆமென்!.

**ரேச்சல் இராஜநாயகம்**

## கவலைப்படாதிருங்கள்

**என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக் காகவும் கவலைப் படாதிருங்கள் [லூக் 12:22]**

**காகங்களை கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்ட சாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப் பூட்டுகிறார். பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் [லூக் 12:24].**

**நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். [பிலி. 4:6]**

வாலிபர் பகுதி

# கண்கள் மறைக்கப்பட்டிருந்தது

நம்முடைய கிறிஸ்துவ ஜீவியத்தில் நம்மோடு இருக்கின்ற கிறிஸ்துவை (வார்த்தை) (வசனம்) நாம் பார்க்க கூடாதபடிக்கு நம்முடைய கண்கள் சில சமயங்களில் மறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமயத்தில் சீஷர்களுக்கு கூட "கண்கள் மறைக்கப்பட்டிருந்தது". லூக்கா 24:16 கிறிஸ்து அவர்களோடு இருந்தும், ஏன்? அவர்களின் கண்கள் மறைக்கப்பட்டது. என்ன தான் காரணம் என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

## I. வீண் பேச்சாகத் தோன்றினதினால் :

லூக்கா 24:1-52 வரை கிறிஸ்துவின் உயிர்தெழுதலின் சம்பவத்தை லூக்கா ஆசிரியர் நமக்கு தெளிவுபடுத்துகிறார். இதில் நடந்த சம்பவத்தை தான் நாம் பார்க்கப் போகிறோம். இயேசு கிறிஸ்து உயிர் தெழுந்த பிறகு ஸ்திரீகள் கிறிஸ்துவின் கல்லறையிடம் சென்று பார்த்த போது அந்த கல்லறைக்குள் கிறிஸ்து இல்லை. அவர்கள் கலக்கமடைந்து இந்த செய்தியை சீஷர்களிடம் துரிதமாக போய் சொன்னார்கள், ஆனால் ஸ்திரீகள் சொன்ன செய்தியை நம்பவில்லை. இவர்களுடைய வார்த்தை அவர்களுக்கு வீண் பேச்சாக தோன்றினதினால் அவர்கள் நம்பவில்லை. வசனம் 24:11 இவைதான் நடந்த சம்பவம் லூக்கா 24:1-52ல்

பிரியமானவர்களே, ஏன் சீஷர்கள் நம்பவில்லை. ஸ்திரீகள் சொல்லி நாம் நம்ப வேண்டுமா? அல்லது கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை இல்லாததினால் நம்பவில்லையா? யோசிப்போம். தொடர்ந்து பார்ப்போம். சீஷர்களுடைய கண்கள் ஏன் மறைக்கப்பட்டன என பார்க்கும் போது, ஸ்திரீகள் சொன்ன வார்த்தை அவர்களுக்கு வீண் பேச்சாக, ஒன்றும் இல்லாத (அ) உண்மை இல்லாத (அ) பொய்யான வார்த்தையாக நினைத்துக் கொண்டார்கள். அவர்கள் கிறிஸ்துவின் உயிர்தெழுதலை நம்பாத மனிதர்களாய் அந்த நேரத்தில் காணப்பட்டார்கள். கிறிஸ்து தன் ஊழிய நாட்களில் தனக்கு நடக்கப் போகிற பாடுகள், மரணம், அடக்கம், உயிர்தெழுதல் இவைகள் எவ்விதமாக நடக்கும் என்று அநேக சமயங்களில் சீஷர்களுக்கு கிறிஸ்து சொல்லி வந்தார். நடக்கப் போகிற காரியங்களை கிறிஸ்து சொல்லும்போது கேட்கிறவர்க்கு விளங்கவில்லை, தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை பிறகு மறந்தே போனார்கள் (லூக் 18:32-34). இயேசு கிறிஸ்து சொன்ன காரியங்களை சீஷர்கள் ஆவிக்குரிய சிந்தனையில் யோசிக்காமல் சரீரப்பிரகாரமாகவே யோசித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவோடு இருந்த ஊழிய நாட்களில் கிறிஸ்து அவர்களிடம் பகிர்ந்து கொண்ட சம்பவங்களை சீஷர்கள் சரீரப்பிரகாரமான ரீதியில் நினைத்துக் கொண்டார்கள். அதனால் தான் ஸ்திரீகள் சொன்ன வார்த்தைகள்

அவர்களுக்கு வீண் பேச்சாகத் தோன்றினது. சிறிது நேரம் யோசித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகளையே சீஷர்கள் சரீரப்பிரகாரமாக எண்ணினார்கள் என்றால் ஸ்திரீகள் சொன்ன வார்த்தை அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? கிறிஸ்துவை அறிந்திருந்தும் உலகப்பிரகாரமான வாழ்க்கைக்கு தங்களை ஒப்புக் கொடுத்து போனார்கள் யோ 20:1-2.

கிறிஸ்து அவர்களோடு நடந்து சென்ற போதிலும் அவரை அறியாதபடிக்கு அவர்கள் கண்கள் (மனக்கண்) மறைக்கப்பட்டிருந்தது. ஏன்? கிறிஸ்துவின் வார்த்தை அவர்களின் நினைவில் இல்லாமல் இருந்ததினால் தான். நாம் வாழ்க்கை எப்படி நடத்தப் போகிறோம் என்று நினைத்தார்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மீன் தொழில் தெளிவாக தெரிந்தது உலக வேலைக்குச் சென்றார்கள். ஆனால், கிறிஸ்து மறைக்கப்பட்டார். நாமும் நம் வாழ்க்கை எப்படி என்று யோசித்து கிறிஸ்துவின் உபதேச சட்டத்திற்கு புறம்பாக இருக்கிற பொய்யாய் தோன்றுகிற "பணம்", "உறவு", "புகழ்" இப்படி போன்ற காரியங்கள் நம்முடைய கண்களுக்கு முன் தெளிவாய் தெரிகிறது. தெரிந்து கொண் டே இருக்கிறது. கிறிஸ்து மறைக்கப்படுகிறார், நாமும் கூட கிறிஸ்து வை அறிந்து கொண்டு சரீரப்பிரகாரமான வாழ்க்கைக்கு நாம் நம்மை ஒப்புக் கொடுத்து வாழும்போது கிறிஸ்து சுவிஷேசம், உபதேசம் நம்மோடு இருந்தும் நம்முடைய கண்களுக்கு முன் மறைக்கப்படு கிறார், மறைக்கப்படுகிறது.

## II. நம்பவில்லை- விசுவாசிக்கவில்லை :

தமிழ் வேதாகமத்தில் அவர்கள் நம்பவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், ஆங்கில வேதாகமத்தில் அவர்கள் விசுவாசிக்கவில்லை என்கிறது. உண்மையை ஒப்புக் கொள்ளவில்லை என்று கூட சொல்லலாம். சீஷர்கள் விசுவாசிக்காத ஒரு சூழ்நிலையில் எம்மாவூருக்கு போய் கொண்டு இருக்கும் நேரத்தில் கிறிஸ்து அவர்களோடு சென்றும் *அவரை அறியாதபடிக்கு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது*. நாமும் கூட கிறிஸ்துவை முழுமனதாய் விசுவாசிக்காத பட்சத்தில் கிறிஸ்துவின் வார்த்தை, சுவிஷேசம் நம்முன் இருந்தும் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டு இருப்பார், மறைக் கப்பட்டு இருக்கும். இப்படி விசுவாசிக்காத சீஷர்கள் பிற்காலத்தில் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக மரித்தார்கள் என்பது உண்மை, நாமும் சீஷர்களைப் போல முதலில் விசுவாசிக்காமல் இருந்துவிட்டு பிறகு உண்மையாக இருப்போம் என்று நினைக்கிறீர்களா? பிரியமானவர்களே இதோ தேவனின் வார்த்தையை கவனியுங்கள், நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும், பாவியும் எங்கே நிற்பான்? 1 பேதுரு : 4:18.

நாம் எங்கே நிற்கப் போகிறோம் என்று நினைத்துப் பாருங்கள் கிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசியுங்கள், நம்புங்கள் நாம் பாவம் (சரீரப்பிரகாரமான காரியங்கள்) செய்யும் போது கிறிஸ்துவின் வார்த்தையை நமக்கு வேதத்தை போதிப்பவர் “ஊழியர்” சொல்லும் போது அந்த வார்த்தையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், விசுவாசிக்க வேண்டும். நாம் செய்த பாவத்தை கிறிஸ்து வின் வசனத்தின் மூலம் சுட்டிக் காட்டும் போது நாம் தாவீதைப் போல மனந்திரும்ப வேண்டும். (2 சாமு 12:1-14) குறிப்பாக, வசனம் 13 தயவு செய்து வாசித்து பாருங்கள். தாவீது ராஜா போல பாவத்திலிருந்து வெளியே வர வேண்டும். அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும் (நீதி 28:13) இரக்கம் பெறுவான் என்று கூறுகிறது. தாவீது செய்தார் இரக்கம் பெற்றார். நாம் எப்படி? கிறிஸ்துவின் வார்த்தை போதிக்கும் ஊழியர் களுக்கு செவி கொடுப்போம். ஒருவேளை சீஷர்களுக்கு தோன்றினது போல உங்களுக்கும் ஊழியரின் வார்த்தை வீண் பேச்சாகத் தோன்றி னால் உங்கள் நிலைமை எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியாது தேவனுக்கு மட்டுமே தெரியும். கிறிஸ்து வசனம், சுவிசேஷம், உபதேசம் நாள்தோறும் நம்மோடு கூட இருக்கிறார் அவரின் வார்த்தை கேட்போம் விசுவாசிப்போம்!! நம் கண்கள் மறைக்கப் படாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருப்போம்.தேவன் வழி நடத்துவார்.


***P.M. சம்மா,*** திருப்பத்தூர்.

## இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான்ஸ்நானகனின் சாட்சி

1. தேவனுடைய குமாரன் [யோவா 1:34]
2. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி [யோவா 1:29,36]
3. பரிசுத்து ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர் [யோவா 1:33]
4. களத்தை நன்றாய் விளக்குபவர் [லூக் 3:17]
5. பதரை அக்கினியால் சுட்டெரிப்பவர் [லூக் 3:17]
6. எல்லாரிலும் மேலானவர் [யோவா 3:31]
7. மணவாளன் [யோவா 3:29]

# வேதாகமத்தில் சிலந்திகள்

சிறுவர் பகுதி



இயேசு கிறிஸ்துவினால் அதிகம் நேசிக்கப்படுகிற என் அன்புத் தம்பி! தங்கைகளே! உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன். நீங்கள் தொடர்ந்து இப்பகுதியை படித்து பயன்பெற்றுக் கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். இம்மாதம் சிலந்திப் பூச்சிகளிடம் இருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோமா? வாருங்கள் என்னோடு.

சில முக்கியமான ஆவிக்குரிய பாடங்களை கற்றுத்தர வேதாகமம் அடிக்கடி செடிகளையோ, பூச்சிகளையோ அல்லது மிருகங்களையோ பயன்படுத்துகிறது என்பது உங்களுக்கு தெரியுமல்லவா? இயேசு ஒருமுறை தமது சீஷர்களைப் பார்த்து, ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால், நீங்கள் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருங்கள் என்று கூறினார். இயேசு தனது சீஷர்கள், எல்லா நேரமும் விரும்பப்பட மாட்டார்கள் என்பதால் அவர்கள் சரியாக வும் அறிவுத்திறனோடும் செயல் பட வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினார். நீதி மொழிகளின் ஆசிரியர் (6:6)ல் நீ எறும்புகளிடத்தில் சென்று அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள் என்று அருமையான கருத்தைக் கூறுகிறார். நாம் அதை இச்சிறுவயதிலிருந்தே செய்ய வேண்டும். எதில் எல்லாம் செய்ய வேண்டும்? அன்றாட சரீர வாழ்க்கையில் மட்டுமல்ல! ஆவிக்குரிய வாழ்க்கையிலும் எறும்பைப் போல செயல்பட வேண்டும். வேதாகமம் சிலந்திகளையும் ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுத்தரும்படி உபயோகிக்கிறது.

நீதி மொழிகளிலே நாம் இந்த வசனங்களை வாசிக்கலாம். தன் கைகளினாலே வலையைப் பின்னி அரசர் அரண்மனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே (30:38) இதற்கு முன்னால் உள்ள வசனங்களில் ஆசிரியர் எறும்புகளைப் பற்றியும் கூறியுள்ளார். அவர் கூறவரும் கருத்து என்னவென்றால், மேற்சொன்ன பூச்சிகள் அனைத்தும் பெரியதாகவோ அல்லது பலமுள்ளதாகவோ இல்லை? அப்படியென்றால் அவை

கள் மிகவும் அறிவாக செயல் பட்டு தங்கள் தாலந்துகளை முறையே பயன்படுத்துவதால் தான். சிலந்திகள் தங்கள் சிறந்த இருப்பிடமான வலைகளை தங்கள் உடம்பிலிருக்கிற வெளி வருகிற சில திரவியங்களைக் கொண்டு கட்டுகிறது. தனது வலையில் சிக்கும் உணவை தனது சிறு கையினால் பிடித்து உட்கொள்கிறது. சிலந்தி தன் உருவத்தில் சிறியதாயிருந்தாலும் அது மிகவும் பெலமுள்ளதாயும் கூர்ந்த அறிவுடையதாகவும் இருக்கும். அதன் உருவமும் பிறரை ஏமாற்றக் கூடியதாயிருக் கிறது.

தீர்க்கதரிசியான ஏசாயாவும் சிலந்திகளை கொண்டு முக்கிய மான பாடங்களை கற்றுத்தரு கிறார். மிகுந்த தீமையான மனித ரைப் பற்றி பேசும் போது இப்படி பயன்படுத்துகிறார். அவர்களை சுற்றி இருந்த ஜனங்களை தீமை யின் வலையில் சிக்க வைக்கும் படியாக வகைத் தேடினார்கள். ஆனால், அடுத்த வசனத்தில் அவைகளின் நெசவுகள் வஸ்தி ரங்களுக்கேற்றவைகள் அல்ல; தங்கள் கிரியைகளாலே தங்களை மூடிக்கொள்ள மாட்டார்கள். வேறு விதமாய் சொன்னால் சிலந்திகள் எவ்வளவு சிக்கலாக, சிறந்ததாக தன் வலைகளைப் பின்னினாலும் தேவனிடத்திலிருந்து அது தன்னை மறைத்துக்கொள்ள முடியாது. தேவன் அவைகள் என்ன செய் கிறது என்பதை எப்பொழுதும் அறிந்தவராகவே இருக்கிறார்.

இதே கருத்தை தான் எபிரெய ஆசிரியர் வலியுறுத்துகிறார். அவருடைய பார்வைக்கு மறை வான சிருஷ்டி ஒன்று மில்லை; சகலமும் அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்று மில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாண மாயும் வெளியரங்கமாயுமிருக் கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (4:13) அடுத்த முறை நீங்கள் சிலந்திப் பூச்சிகளைப் பார்க்கும் போது இந்த முக்கிய பாடங்களை நினை வில் கொள்ளுங்கள். நீங்கள் சிறுவர்களாக இருந்தாலும், தேவனுக்காக அதிகமான காரியங் களை செய்ய முடியும். நீங்கள் தவறான காரியம் செய்யும் போது அவரிடம் அதை மறைக்க முடி யாது. ஏனெனில், அவர் எல்லா வற்றையும் பார்த்தும், அறிந்தும் இருக்கிறார். ஆகவே, இந்த சிறு பிராயத்திலேயே அவருடைய வசனத்தின் படி செய்வோம். இந்த கோடை விடுமுறையில் பெற் றோர்களுக்கும், மற்றவர்களுக் கும், கீழ்ப்படிந்திருங்கள். தேவ ஆசீர்வாதத்தை பெறுங்கள்!! அடுத்த மாதம் சந்திப்போமா!

அடுத்த மாதம் நடக்கவிருக் கும் ஏலகிரி முகாமிலே சிறுவர்க ளுக்கு தனியாகவும் சிறப்பாகவும் வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டி ருக்கிறது. நீங்கள் அனைவரும் வந்து பயன்பெறுங்கள் என ஊக் கப்படுத்துகிறேன்.

**R. ஏபில் R. நாயகம்**

# நீங்கள் பாராசூட்டை ஆயத்தம் செய்பவரா?

வியட்நாம் போரின் போது அமெரிக்க கப்பற்படையில் பைலட்டாக பணிபுரிந்த "சார்லஸ் பிளம்ப்" என்பவரைப் பற்றி சமீபத்தில் ஒரு சிறிய கதை படித்தேன். அடுத்தடுத்த எழுபத்தைந்து தாக்குதலுக்குப் பிறகு, ஓர் ஏவுகணை அவருடைய விமானத்தை அழித்தது, அவர் ஒரு கம்யூனிஸ்ட் சிறையில் ஆறு வருடங்களை கழித்தார், அந்த அனுபவத்திலிருந்து அவர் கற்றுக் கொண்ட பாடங்களை இப்போது விவரிக்கிறார்.

ஒரு நாள் அவரும், அவருடைய மனைவியும் ஓர் உணவு விடுதியில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஒரு மனிதன் அவரிடம் வந்து அந்தத் தாக்குதல் வரலாற்றைச் சொன்னான். நீங்கள் நினைக்கிறபடியே *பிளம்ப்* மிகவும் ஆச்சரியப்பட்டு அந்த மனிதன் அவைகளையெல்லாம் எப்படி அறிந்தான் என்பதை கேட்டார். அந்த மனிதன் இப்படியாகச் சொன்னான், நீங்கள் பயன்படுத்திய பாராசூட்டை "பேக்" செய்து கொடுத்தது நான் தான் என்று. இதற்காக, பிளம்ப் அந்த மனிதனுக்கு நன்றி உள்ளவராக இருந்தார். ஏனென்றால், அந்த மனிதன் தன்னுடைய வேலையை சரியாக செய்யாதிருந்தால், பிளம்ப் அந்தத் தாக்குதலில் உயிர் பிழைத்திருக்கமாட்டார். சாதாரணமாக, பிளம்ப் அவர்களால் அந்த மனிதனை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஏனென்னறால், பிளம்ப் சண்டையின் போது ஒரு முக்கியமான போர் பைலட்டாக இருந்தார்; அந்த மனிதன் ஒரு சாதாரண சிப்பாயாக இருந்தார். ஆயினும், இப்போது பிளம்ப், அந்த மனிதனுடைய வேலை, இவருடைய உயிரைக் காப்பாற்றினபடியால், நன்றியோடு அந்த மனிதனுடைய கைகளை குலுக்கி அந்த மனிதனை உற்சாகமாய் வரவேற்றார்.

நீங்கள் இந்த கட்டுரை "பிளம்ப்" பற்றியது என நினைக்கலாம், ஆனால் உண்மையில், அந்த பாராசூட்டை பேக் செய்தவரை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என எண்ணுகிறேன். இந்த மனிதன் பல மணி நேரம் கப்பலின் ஆழத்தில் இருந்து மிகவும் ஜாக்கிரதையாக அந்த பாராசூட்டை தேவையான அளவில் சரியான மடிப்புகளோடு மடித்துக் கொடுத்தான். அது அந்த மனிதனுக்கு வேலைப் பளுவையும் சலிப்பை ஏற்படுத்தியிருக்கும். ஒருவேளை, முக்கியமற்ற, உபயோகமற்ற வேலையாகக் கூட கருதியிருக்கலாம். ஆயினும், ஒரு பைலட், வேகமாக சென்று கொண்டிருந்த ஜெட் விமானத்திலிருந்து வெளியேற நிர்பந்திக்கப்படும் போது, அந்த மனிதனின் பிரயாசத்தின் பலன் முக்கியமற்றதாகவோ, உபயோகமற்றதாகவோ இராமல், உண்மை

யாகவே, ஜீவன் அல்லது மரணத்தை நிர்ணயிக்கிற ஒரு விஷயமாகவே மாறி விடுகிறது. இந்த மனிதன் எந்த பதக்கத்தையோ அல்லது பரிசுக ளையோ பெறவில்லை; இவனுடைய பெயர் எந்த சரித்திர புத்தகத்தி லும் இடம் பெறாது. ஆயினும், போர் முனையில் இவனுடைய பங்கு மிக முக்கியமானதாகும், விசேஷமாக தனிப்பட்ட ரீதியில் இவரு டைய பொறுப்பான வேலையினால் உயிர் பெற்ற "பிளம்ப்" போன் றோருக்கு இவனுடைய பங்கு மிக முக்கியமானதாகும்.

ஒருவேளை நீங்கள் இதுபோன்று பாராசூட்டை பேக் செய்கிற ஒரு நபராக, சாதாரணமானவராக இருக்கலாம். வேறுவிதமாகச் சொன்னால் உங்கள் கடமையை மிக தாழ்வாக முக்கியமற்றதாக நினைக்கலாம். தேவனுக்கும் அவருடைய சபையின் வேலைக்கும் அர்த்தமுள்ள விதத்தில் நீங்கள் செய்வதற்கு கொஞ்சம் தான் இருக்கி றது அல்லது உங்கள் பங்கு குறைவானதாக இருக்கிறது என எண்ண லாம். அது உண்மையானால், உங்கள் சிந்தனையை மறு பரிசீலனை செய்ய உங்களை வலியுறுத்துகிறேன்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய தனிப்பட்ட செயல்பாடுதான், தான் வாழ்கின்ற பகுதியில் அயலகத்தாரிடத்தில் சபை பற்றியும், கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றியும் உயர்ந்த எண்ணத்தை ஏற்படுத்து கிறது. பிரசங்கியார் பெரிய பாடங்களைப் பற்றி பிரசங்கிக்கலாம், முடிந்தவரை எல்லாரிடத்திலும் நட்பு வைத்துக் கொள்ளலாம், ஆனால், கிறிஸ்தவன் அல்லாத ஒருவர், ஒரு கிறிஸ்தவனின் மாய்மாலத்தை யும், பாராமுக மனநிலையையும் கண்டுவிட்டால், அப்போது பிரசங்கி யார் செய்கிறதெல்லாம் ஒன்றுமில்லாமல் வீணாகப் போய் விடும்.

சபையினுடைய வேலை என்று வரும்போது, முக்கியமற்ற வேலைகள் என்று எதுவுமே கிடையாது. சில தேவதாசர்களுக்கு வெளிப்படையாக கனமும், மகிமையும் கிடைக்கிறது என்பது உண்மை தான். மனிதன் சில வேலைகளை மற்ற வேலைகளை விட குறிப்பிடத் தக்க ஒன்றாக கருதுவது நிச்சயமாகவே உண்மைதான். ஆனால், நீங்கள் மனிதனுக்கு அல்ல தேவனுக்கு ஊழியம் செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இயேசு ஒருமுறை சீஷர்களிடத்தில் இப்படியாகச் சொன்னார். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக் கிறபடியினாலே என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற் போவ தில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று (மாற்கு 9:41). இயேசுவின் நாமத்தில் அன்பாக நாம் செய்யும் மிக தாழ்மையான சேவைகளுக்கு கூட பலன் அளிக்கப்படும் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அது நாம் அவருக்காகச் செய்யும் ஒவ்வொரு வேலையையும் குறிப்பிடத்தக்க ஒன்றாக

மாற்றுகிறது இல்லையா? பவுல், மகிமையையும், கனத்தையும் யார் பெற்றுகொள்கிறார் என்பது ஒரு பொருட்டல்ல என்பதை உணர்ந்து கொண்டார். மாறாக, தேவனுக்கு கனமும், மகிமையும் உண்டாக வேண்டும். உதாரணமாக, பிலிப்பியர் 1:15ல் சிலர் பொறாமையி னாலும், விரோதத்தினாலும் சுவிசேஷத்தை பிரசங்கித்ததாக பவுல் கூறுகிறார். ஒருவகையில் அவர்கள் பவுலின் உபத்திரவத்தை அதிகப் படுத்தியிருக்கிறார்கள், இதினிமித்தம் பவுல் மனமுடையவதற்கு பதிலாக சந்தோஷபட்டிருக்கிறார்கள். 18 ஆம் வசனத்தில் பவுல் இப்படியாகச் சொன்னார். இதனாலென்ன? ***வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்ப டுகிறார், அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப் படுவேன்.*** யார் வேலையை செய்தது? யார் கனத்தை பெறுவது என்பதெல்லாம் தேவையில்லாதது இங்கே உணமையிலேயே முக்கி யமானது என்னவென்றால், தேவனுடைய வேலை செய்யப்பட்டது. அவ்வளவே. பவுல் இதே விதமான மனப்பான்மையை 1 கொரிந்தியர் 3:5,6 வசனங்களிலும் வெளிப்படுத்தியிருக்கிறார். பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன் அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய் தார். தேவனுடைய ராஜ்யத்தில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வேலையும் அர்த்தமுள்ளதே, தேவன் ஒவ்வொரு வேலையாட்களுக் கும் பலன் அளிப்பார். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் சேவை செய் யப்பாடுபடுவோம். பாராசூட்டை ஆயத்தம் செய்பவர் போல் இருப்போம். நாம் ஒவ்வொருவரின் மூலமாக பரலோகத்தின் தேவன் மகிமைப்படுவாராக!.

**ஜெர்ரிபேட்ஸ்** **JERRY BATES**

## கூடி வரும் போது செய்ய வேண்டியவை

1. ஜெபம் செய்தல் — 1 தீமோ 2:1
2. பாடுதல் — எபி 2:12
3. அப்பம் பிட்குதல் — அப் 20:7
4. காணிக்கை கொடுத்தல் — 1 கொரி 16:2
5. போதித்தல், பிரசங்கித்தல் — அப். 20:7

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருப்பதில் சம்மந்தப் பட்டுள்ள காரியங்களுள் ஒன்று ஆதிக்கிறிஸ்தவர்களால் நமக்கு அளிக் கப்பட்டுள்ள மாதிரிகளைப் பின்பற்றுவதாகும். அந்த மாதிரியின் ஒரு விதத்தை புதிய ஏற்பாட்டின் வரலாற்று புத்தகமாகிய அப்போஸ்தலரு டைய நடபடிகள் புஸ்தகத்தில் நாம் காண்கிறோம். அவர்களுடைய ஆச்சரியமூட்டும், தூண்டுகோலாக அமையும் மாதிரியை நாம் தொடர்ந்து விவரமாக ஆராய்வேம்.

அப் 5:30-33 வசனங்களை வாசியுங்கள். மனுஷருக்கு கீழ்ப்படி வதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாகிறது, என்று அவர்களுடைய நாட்களில் வாழ்ந்த யூத மதத் தலைவர்களைப் பார்த்து சொன்ன பிறகு பயமில்லாத கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்? அப்போஸ்தலர்கள் அந்த துன்மார்க்கமான மதத் தலை வர்கள் இயேசுவை மரத்திலே தூக்கிக் கொலை செய்ததாக குற்றம் சாட்டி னார்கள்! அந்த உண்மையுள்ள சகோதரர்கள் எந்த அளவுக்கு நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நேசித்திருக்கிறார்கள் என்று பாருங்கள்.

அது நமக்கு எப்படித் தெரியும்? அப்போஸ்தலர்கள், அந்த மதத் தலைவர்களை இயேசுவை கொலை செய்ததாக குற்றம் சாட்டின போது, அந்த குற்றச்சாட்டு மதத்தலைவர்களை கடுங்கோபபடுத்தும் என்பதை அறிந்திருந்தார்கள். அப்போஸ்தலர்கள் அந்த மதத்தலைவர் கள் தங்களை அடிப்பார்கள், சிறையில் அடைப்பார்கள், கொலை கூடச் செய்வார்கள் என்பதை அறிந்திருந்தார்கள்! ஆனால், அப்போஸ்தலர் களுக்கு இயேசுவின் மீதிருந்த அன்பும் அந்த மதத்தலைவர்களின் ஆத்துமாக்களைக் குறித்து இருந்த அன்பும் அப்போஸ்தலர்கள் தங்கள் உயிரையே விலையாக கொடுக்க வேண்டியதாயிருந்தாலும் கூட அவர்கள் சத்தியத்தைப் பேச தூண்டுகோலாக இருந்தது! இது தான் அன்பின் உயரியவகை! அப்போஸ்தலர்கள் அங்கேயே நின்று விட்டார்களா? இல்லை! அந்த துன்மார்க்கமான மனுஷர்கள் தேவனு டைய ஒரே பேறான குமாரனை கொலை செய்தபிறகு அவர்களுடைய பிதாக்களின் தேவன் என்ன செய்தார் என்பதையும் சுட்டிக்காட்டினார் கள். பிதா, இயேசுவை சாத்தனையும், பாவத்தையும் மரணத்தையும் வெற்றி சிறக்கத்தக்கதாக அவரை உயிரோடு எழுப்பினார்.. மேலும், பிதா தேவ ஆட்டுக்குட்டியை அதிபதியாகவும், இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்.

இயேசுவை உயிரோடு எழுப்பி, உயர்த்த பிதாவுக்கு இருந்த நோக்கங்களுள் ஒன்று என்ன? இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும், பாவ மன்னிப்பையும் அருளுகிறதற்காக தேவன் அப்படிச் செய்தார். அந்த மதத்தலைவர்கள் இந்த தைரியமான செய்தியை கேட்டபோது அவர்களுடைய பதில் என்னவாயிருந்தது? அவர்கள் மூர்க்கமடைந் தார்கள்? அவ்வளவுதானா? இல்லை! அவர்களை கொலை செய்யும் படிக்கு யோசனை பண்ணினார்கள்.

அப் 5:38, 39 வசனங்களை வாசியுங்கள். 34-37 வசனங்களின் படி தைரியமான பரிசேயரான கமாலியேல் என்பவர் அந்த மதத் தலைவர்கள் அப்போஸ்தலர்களுக்கு செய்யவிருந்த காரியங்களை குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று ஆலோசனை சொன்னார். இப்போது, இந்த இரண்டு வசனங்களில், கமாலியேல் தன்னுடைய இறுதி எச்சரிக்கையையும், ஆலோசனையையும் வழங்கினார். அவர் தமது சக தலைவர்களை விட்டுவிடும்படி புத்திமதி சொன்னார். ஏன் அப்படிச் சொன்னார்?

அப்போஸ்தலர்களுடைய கிரியைகள் மனுஷரால் உண்டாயிருந்ததானால் அது ஒழிந்துபோகும். ஆயினும், அப்போஸ்தலர்களுடைய கிரியைகள் தேவனால் உண்டாயிருந்ததானால் அந்த மதத்தலைவர்களோ அல்லது வேறு யாரோ அதை ஒழிக்க முடியாது! மேலும், அப்போஸ்தலர்களுடைய கிரியைகள் தேவனால் உண்டாயிருந்ததானால் அதை தலைவர்கள் எதிர்த்ததால் அவர்கள் தேவனோடு போர் செய்கிறவர்களாய் காணப்படுவார்கள்.

பிரியமானவர்களே நாம் தேவனுடைய செய்தியை அவர் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கிறபடி வெளிப்படுத்தும் போது எந்த ஒரு மனிதனோ அல்லது அமைப்போ அதை ஒழிக்க முடியாது! அவர்கள் நம்மோடு போர் செய்கிறபேது அவர்கள் தேவனோடு போர் செய்கிறவர்களாய் காணப்படுவார்கள். அவர்கள் இறுதியில் நம்முடைய சர்வ வல்லமையுள்ள தேவனோடு போர் செய்ய முடியாமல் தோற்றுப் போவார்கள்!

அப்போஸ்தலர்களும், ஆதிக்கிறிஸ்தவர்களும் இதை தங்களுடைய முழு இருதயத்தோடும் விசுவாசித்தார்கள். நாம் இவைகளை ஏற்கனவே பார்த்து இருக்கிறோம். நாம் இதை துரிதமாகப் பார்ப்போம்.

அப் 5:40-42 வசனங்களை வாசியுங்கள். கமாலியேலிடமிருந்து உண்மையும், தைரியமுமான வார்த்தைகளை கேட்ட பிறகு அந்த மதத் தலைவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் அப்போஸ்தலர்களை அடித்தார்கள்! அவ்வளவுதானா? இல்லை! அவர்கள் மறுபடியும் அப்போஸ்தலர்களை இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசக் கூடாது என்று கட்டளையிட்டார்கள். அதன்பிறகு, அந்த தலைவர்கள் அப்போஸ்தலர்களை போகவிட்டார்கள்.

அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் இயேசுவின் நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியால் சந்தோசமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டு புறப்பட்டு போனார்கள். மறுபடியும் நம்முடைய அன்புள்ள மீட்பரிடத்தில் அப்போஸ்தலர் களுக்கு இருந்த அபரிதமான அன்பை நாம் கவனிக்கிறோம். அவர்கள் இயேசுமீது வைத்த அளவற்ற அன்பின் நிமித்தம் அவரைப் போலவே பாடுபடவும் விரும்பியிருக்கி றார்கள். அவர்கள் தங்களுக்காக தம்முடைய ஜீவனையே விட்ட இயேசுவைப் போல சிந்திக்க, பேச, வாழ விரும்பினபடியால் அதன் விளைவாக பாடுபடவும் விரும்பினார்கள். இவைகளைச் செய்வதினால் வரும் பாடுகளை சகிக்க நாம் விரும்புகிறோமா? அந்த காரணங்களுக்காக நாம் பாடுபடும்போது, நாம் சந்தோசப்படுகிறோமா? நம்முடைய

அருமை ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினிமித்தம் அவமானமடைந்தால், அதை நாம் கனமாக ஆசீர்வாதமாக எண்ணுகிறோமா?.

நாம் அந்த ஆதிக்கிறிஸ்தவர்களைப் போல நம் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பயத்தோடும் நம்முடைய இரட்சகராகிய இயேசுவினிடத்தில் அன்பு கூர்ந்தால் தான் நீங்களும், நானும் அவர்களைப் போல சிந்திக்க முடியும், பேச முடியும், வாழ முடியும்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி, ஆலோசனை சங்கம் இயேசுவின் அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்தைக் குறித்து பேசக் கூடாது என்று கட்டளையிட்டது. அந்த கட்டளைக்கு அப்போஸ்தலர்கள் கீழ்ப்படிந்தார்களா? நிச்சயமாக இல்லை.

அதற்கு பதிலாக அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்? போதிப்பதையும், பிரசங்கிப்பதையும் அவர்கள் நிறுத்தவில்லை! அவர்கள் எதைப் பற்றி பிரசங்கித்தார்கள்? அவர்கள் இயேசுவே கிறிஸ்து என்று போதித்தார்கள். அதாவது, அவரே தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட மேசியா என்று பிரசங்கித்தார்கள்.

எத்தனை நாளுக்கு ஒரு முறை அந்த செய்தியை அவர்கள் பிரசங்கித்தார்கள்? தினந்தோறும்.

அந்த செய்தியை அவர்கள் எங்கே பிரசங்கித்தார்கள்? தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் பிரசங்கித்தார்கள்!

உண்மையாகவே, அந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் கர்த்தருக்கான அன்பிலே நிரப்பப்பட்டிருந்தார்கள். அதோடுகூட கர்த்தர் பேரில் அவர்களுக்கு அபரிதமான நம்பிக்கையும், விசுவாசமும் இருந்தது. மேலும், ஆத்துமாவை உருவக்குத்துகிற இந்த செய்திக்குப் பதிலாக யார் என்ன ஊறு விளைவித்தாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் தைரியமாக பிரசங்கிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். அவர்களுடைய இந்த மகத்தான மாதிரியை நாம் எவ்வளவாய்ப் பின்பற்ற வேண்டும்.

அப் 6:1-5 வசனங்களை நாம் வாசிக்கும்போது, இங்கே கிறிஸ்தவ விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லை என்று கற்றுக் கொள்கிறோம். அப்போது, அப்போஸ்தலர்கள் சகோதரரை வரவழைத்து அப்போஸ்தலர்கள் பந்தி விசாரணை செய்வதற்கு ஏற்படுத்தத்தக்கதாக உண்மையுள்ள ஏழு சகோதரரை தெரிந்திருக்கும்படி சகோதர்களிடம் கூறினார்கள். அப்போது ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர, சகோதரிகளின் தேவைகளை சந்தித்தார்கள் என்று நாம் பார்க்கிறோம்.

ஏழாம் அதிகாரத்தில் பந்தி விசாரணை செய்ய தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவரான ஸ்தேவானின் ஆச்சரியமான விசுவாசம், அன்பு மற்றும் தைரியத்தை நாம் கற்றுக் கொள்கிறோம். இந்த ஏழாம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே இந்த தைரியமான சகோதரர் ஆலோசனை சங்கத்தாரைப் பார்த்து கீழ்க்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

வணங்காக்கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே; பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள் என்று தெளிவாகவே, இது பரிசுத்த ஆவியி

னாலே வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாததினால் அவர்கள் எதிர்த்தார்கள்; நீதிபரருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள் (அதாவது இயேசுவை கொலை செய்தார்கள்); நீங்கள் தேவனிடத்திலிருந்து நியாயப் பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கை கொள்ளமறபோனீர்கள்.

அந்த தைரியமான செய்திக்கு அந்த மதத்தலைவர்களின் பதில் என்னவாயிருந்தது? அவர்கள் ஸ்தேவனைப் பார்த்து பல்லைக் கடித்தார்கள், உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து ஸ்தேவானை கல்லெறிந்தார்கள்.

ஸ்தேவான் இயேசுவை அதிகமாக நேசித்தார். அத்தோடு கூட, மதத்தலைவர்களையும், ஸ்தேவான் அதிகமாக நேசித்தபடியினால் தான் அவர்கள் கேட்க வேண்டிய சத்தியத்தை அவர்களுக்குச் சொன்னார்கள். அதன் காரணமாக ஸ்தேவான் தன்னுடைய ஜீவனையே கிரயமாக கொடுக்க வேண்டியிருந்தது! உண்மையாகவே ஸ்தேவானும் பவுலைப் போல கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்ற சிந்தை உடையவராய் இருந்திருக்க வேண்டும் (பிலிப்பியர் 1:21)

பிரியமானவர்களே, நீங்களும் நானும் அவ்விதமாகவே சிந்திக்கவும், பேசவும் வேண்டும்! நம்மில் அநேகர் அதைச் செய்யும் போது நம்மைச் சுற்றிலும் இருக்கிற அநேகரிடத்தில் நாம் ஒரு வல்லமையான தாக்கத்தை ஏற்படுத்துவோம்.

அப் 8:4யை வாசிக்கும்போது எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டானபோது சில கிறிஸ்தவர்கள் சிதறிப்போனார்கள். அந்த கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டபோது என்ன செய்தார்கள்? அவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்ட போதிலும் கூட வசனத்தைப் பிரசங்கித்தார்கள். தெளிவாகவே, அது கிறிஸ்துவின் வார்த்தைகளாக உள்ளன.

பிரியமானவர்களே, இப்போது கீழ்காணும் கேள்வியை ஜாக்கிரதையாக சிந்தித்துப் பாருங்கள். அவர் சிதறிப்போனபோது தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தது யார்? கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களா? இல்லை! ஒன்றாம் வசனத்தின்படி அப்போஸ்தலர் கள் எருசலேமிலேயே இருந்து விட்டார்கள். அங்கேயே தங்கியிருந்து கிறிஸ்துவின் வேலையை தொடர்ந்து செய்தார்கள்.

அப்படியென்றால் தேவனுடைய வார்த்தையை எங்குந் திரிந்துதேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தது யார்? தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் தான் பிரசங்கித்திருக்கிறார்கள்! அவர்கள் கிறிஸ்துவுக்கான அன்பிலும், சக மனிதர்களுக்கான அன்பிலும் நிறைந்து காணப்பட்டபடியால் இரட்சிப்பின் செய்தியை கேட்கும் யாவருக்கும் போதித்தார்கள்! அவர்களை யாரும் தடுத்து நிறுத்த அவர்கள் அனுமதிக்கவில்லை.

இன்றும் அதே வைராக்கியம் நம்முடைய மகா மீட்பரை பின்பற்றுகிற யாவருக்கும் இருப்பது அவசியமாகும். நம்முடைய அன்புள்ள தேவன் நம்மை இந்த உலகத்தில் வாழ அனுமதிக்கும் ஒவ்வொரு நாளும் அத்தகைய வைராக்கியத்தை நீங்களும், நானும் உடையவர்களாயிருக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்! நம்முடைய அன்புள்ள எஜமானின் அளவற்ற ஐசுவரியத்தை அநேகருக்கு போதிக்கத்தக்கதாக கிறிஸ்துவுக்கான அன்பையும் உங்களை சுற்றி இருப்பவர்களுக்கான அன்பையும் அதிகப்படுத்துவீர்களா?.

**BENNY MARTIN** **CHARLE DIPALMA**

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## PART II பாடம் - 1. அப்போஸ்தலனாகிய பவுல்

### I. பவுலின் பிறப்பிடமும், இளமைப்பருவமும்

இயேசுவானவர் தாம் நேரடியாகத் தெரிந்து கொண்ட அப்போஸ்தலர்களிடையே மிகவும் பிரசித்தி பெற்றவர் அப்போஸ் தலனாகிய பவுல். நம்முடைய ஆண்டவர் இவரை விசேஷித்த அப்போஸ் தலனாக புறஜாதிகளுக்கென்று தெரிந்து கொண்டார் (அப்.9:15). இவரது ஊழியங்கள் அதினிமித்தமாக வந்த பாடுகள் சபைகளைக் குறித்த கவலைகள், பிரயாசங்கள் என்று எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது 12 அப்போஸ்தலரைக் காட்டிலும் இவர் அதிகமாய் பாடு பட்டு, துன்புறுத்தல்களுக்கும், இன்னல்களுக்கும் ஆளானார் (2கொரி 11:23) கிறிஸ்துவுக்காக மரிக்கவும் ஆயத்தமாக இருந்தார் (அப். 21:13) கிறிஸ்துவுக்காக கடைசியாக இரத்த சாட்சியாக மரித்த அப்போஸ்தலனான இவரைப் படித்து இவரைப் பின்பற்றுவோமாக! (1கொரி.11:1)

**I. பவுலின் பிறப்பிடம் :** சின்ன ஆசியாவின் (Minor Asia) தென் கிழக்கிலுள்ள சிலிசியா நாடு. மிகவும் செழிப்பான தோற்றத்தையுடையதாக இந்த நாடு திகழ்ந்திருந்தது. இந்நாட்டிற்கு பொருளாதாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் பட்டணமான தர்சுபட்டணம் இந்நாட்டின் தலைநகரமாகும். இந்த தலை நகரத்தில் பவுல் அப்போஸ்தலன் பிறந்தார். கி.பி. 5 ஆம் வருஷத்தில் பிறந்திருப்பார் என்று தெரிகிறது.

இவரது பெற்றோர் இஸ்ரவேல் கோத்திரங்களிலே மிகவும் செல்வாக்கு பெற்ற பென்யமீன் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் (பிலி. 3:5) இக்கோத்திரம் மட்டும் ஏன் செல்வாக்குடையதாக இருக்கிறதென்றால் கோத்திரங்களின் தகப்பன் யாக்கோபு தனது மனைவி ராகேலுக்காக 14 வருடம் தன் மாமன் லாபானிடத்தில் ஆடுகளை மேய்க்கும் வேலை செய்தார். யாக்கோபு ராகேலை அதிகமாக நேசித்தார். அந்த ராகேல் யோசேப்பையும், பென்யமீனையும் பெற்றெடுத்தாள். பென்யமீன் பிறக்கும் போது ராகேல் மரணமடைந்தாள்! யாக்கோபு ராகேலை இழந்த நிலையில் யோசேப்பையும், பென்யமீனையும் அதிகமாய் நேசித்து ஆறுதல் அடைந்தபோது யோசேப்பு தன் சகோதரர்களாலே எகிப்து நாட்டிற்கு விற்கப்பட்டார். யாக்கோபுக்கு மேலும் துன்பம் ஏற்பட்டது. அந்த துயரத்தை நீக்கும்படி பென்யமீனை அதிக பாசத்தோடும், செல்வாக்கோடும் வளர்த்தார்! இந்த செல்வாக்கு பிற்காலங்களிலும் இருந்தது. இக்கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் யுத்தத்தில் மிகவும் வல்லவர்களாகக் காணப்பட்டனர் (ஆதி. 29:27) ஆகவே தான், இஸ்ரவேலருக்கு முதல் அரசன் சவுல் இந்தக் கோத்திரத்திலிருந்து தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார். (1சாமு 9:1,2) இஸ்ரவேலரின் முற்பிதா ஆபிரகாம் எபிரெயனாக இருந்தபடியால் (ஆதி 14:13). இஸ்ரவேலர் எபிரெய மொழியை தாய்மொழியாகக் கொண்டிருந்தனர்

எனவே, அவர்கள் எபிரெயப் பெயரைக் கொண்டிருந்தனர். இஸ்ரவேலரின் முதல் ராஜா "சவுல்" என்பது எபிரெயப் பெயர். அந்த வம்ச வழியில் அப்போஸ்தலனாகிய பவுலின் பெயர் எபிரெய வார்த்தையில் "சவுல்" என்றும் அதே பெயர் கிரேக்க வார்த்தையில் பவுல் என்றும் கொண்டிருந்தது.

பவுலின் தந்தை எபிரெயனாகவும் வேதத்தை நன்றாகக் கற்றுத் தேறிய செல்வாக்கு மிகுந்த பரிசேயனாகவும் இருந்துள்ளார் (பிலி 3:5) அதே சமயத்தில் அவர் ரோம அரசாங்கத்தில் ஒரு முக்கியமான துறையில் பொறுப்பாளராகவும் இருந்தபடியால் ரோம மொழியை நன்றாக அறிந்த ரோமப் பிரஜா உரிமையையும் பெற்றுள்ளார். அது தவிர கிரேக்க மொழியும், அரமேயு மொழியையும் நன்றாக தெரிந்து வைத்திருந்தார். இப்படிப்பட்ட செல்வாக்குடைய பரிசேயக் குடும்பத்தில் பவுல் பிறந்தபடியால் இவர் கிறிஸ்தவனாக மாற இவரது தந்தை கொஞ்சம் கூட விரும்பவில்லை. இதற்கு பவுலும் இடம் தராமல் கிறிஸ்தவனாகி தனது தகப்பனின் சொத்துக்களை விரும்பவில்லை. ஆகவேதான் பவுல் எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் என்று கூறுகிறார் (பிலி 3:7,8) பவுலின் விசுவாசமும், நம்பிக்கையும் அவரது உண்மையான மனமாற்றமும் அவரது குடும்பத்தை மாற்றச் செய்திருக்கிறது. எனவே, பவுலின் ஊழியத்தின் பிற்காலத்தில் அவரது குடும்பத்தார் மிகவும் உதவியாக இருந்துள்ளனர் (அப். 23:16).

அன்பானவர்களே, நாம் கிறிஸ்துவின் மேல் வைத்திருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும், நம்முடைய உண்மையான மனமாற்றமும், நம்முடைய குடும்பத்தாரை மனமாற்றச் செய்யும். பணத்திற்காகவும், பொருளுக்காகவும் இவ்வுலக ஐசுவரியத்திற்காகவும் இப்படி இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்! (1கொரி 15:19)

## II. பவுலின் வளர்ப்பு முறை

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி 22:16) என்ற சாலமோனின் அறிவுரைகளை நன்கு அறிந்த பரிசேயக் குடும்பத்தில் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் வளர்க்கப்பட்டார் பவுல். யூதர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் போது மூன்று விதமான கல்வியைக் கற்றுக் கொள்ளும்படிச் செய்வார்கள். அது போலவே பவுலும் உலகக் கல்வி, தொழிற்கல்வி மற்றும் வேதாகமக் கல்வி (அப். 22:3) என மூன்று கல்வியைக் கற்றுக் கொண்டு வளர்ந் தார். இவ்வாறு வளர்க்கப்பட்டபடியால் பவுலின் ஊழியத்தில் உலகக் கல்வியின் மூலமாக யூதர்களுக்கு எபிரெய மொழியிலும் (அப்.22: 1,2) ரோமர்களுக்கு ரோம் மொழியிலும் மற்றும் கிரேக்கர்களுக்கு கிரேக்க மொழியிலும் சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறார் (அப். 18:1-4)

## III. பவுலின் இளமைப்பருவம் :

சிலிசியா நாட்டின் பேரும், புகழும் பெற்ற தர்சு பட்டணத்தில் பவுல் பிறந்து தன்னுடைய இளமைப் பருவத்தில் இந்த புகழ் பெற்ற

பட்டணத்திலே வளர்ந்தார் (அப். 21:39) தர்சுப்பட்டணம் ஒரு துறை முகப்பட்டணமாகும். இங்கு வியாபாரக் கப்பல்கள் மூலமாக மூங்கில் களும், பலவிதமான மரச்சாமான்களும் இந்த பட்டணத்திலிருந்துக் கொண்டு செல்லப்படுகின்றது. இதன் விளைவாக இங்கு நாகரீக வளர்ச்சி நன்றாக இருந்தபடியால் நிறைய பள்ளிக்கூடங்கள் இருந்தது. எனவே, பவுல் தன்னுடைய இளமையில் இங்குதான் கல்விக் கற்றார். பின்பு மேற்படிப்புக்கு எருசலேம் சென்று படித்திருப்பார்.

தீர்க்கதரிசியான தானியேலும், அவரது நண்பர்களும் கல்வி யில் நிபுணராக இருந்ததுபோல (தானி 1:3) பவுலும் கல்வியில் சிறந்த நிபுணராக இருந்திருக்க வாய்ப்புண்டு. எப்படியென்றால் கல்வி யிலும், அரசுத் துறையிலும் கனம் பொருந்திய ரோம அதிகாரி பெஸ்து கூறும் பொழுது பவுலே அதிகக்கல்வி உனக்குப் பயித்தமுண்டாக்கு கிறது என்கிறான் (அப் 26:24). பேதுரு எழுதும் பொழுது பவுல் சொன்னவை (எழுதியிருக்கிறவைகளில்) சில காரியங்கள் அறிகிற தற்கு அரிதாயிருக்கிறது என்று கூறுகிறார் (2பேதுரு 3:15,16). இந்த சாட்சிகளைப் பார்க்குபொழுது பவுல் கல்வியில் ஒரு நிபுணராக இருந்திருக்கலாம்.


உலகக் கல்வியின் மூலமாக வேதாகமக் கல்வியும் நன்றாகக் கற்றார். அவர் வேதப் பிரமாணத்தைக் கற்றுக்கொள்ள எருசலேமுக்கு வந்து (அதாவது நூறு மைல்கள் கப்பல் மூலமாக) கனம் பெற்ற நியாய சாஸ்திரி கமாலியேலின் பாதத்தருகே அமர்ந்து நியாயப் பிரமாணத் தைக் கற்றுத் தேறினார் (அப். 22:3, 26:4) இவ்விதமாக இவர் தர்சுவி லும், எருசலேமிலும் கல்வி பயின்றார்.

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை**

## நாளும் நடப்பும்

1. **பொதுத் தேர்தலுக்கான முதல் கட்டத் தேர்வில் 58-60% சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது.**
2. **தமிழகத் தேர்தலுக்காக மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்படுத் தப்பட்டுள்ளதாக காவல்துறைத் தலைவர் அறிவிப்பு.**
3. **அத்வானி RSS - ன் அடிமை என்று சோனியாகாந்தி கடும் தாக்கு.**
4. **கருத்துக் கணிப்பு மற்றும் வாக்குக் கணிப்புக்கு தேர்தல் ஆணையம் தடை.**
5. **தன்னை அறிமுகப்படுத்திய காங்கிரஸுக்கு விசுவாச மாக இருப்பேன் என்று திருமாவளவன் அறிக்கை.**
6. **மீண்டும் காங்கிரஸ் ஆட்சி அமையும் என்று ராகுல் காந்தி நம்பிக்கை.**
7. **ஐபில் கிரிக்கெட் போட்டிகள் தென் ஆப்பிரிக்காவுக்கு மாற்றம்.**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

## திருமறை ஆசான்
இதழ் ஆசிரியரின்
## திருமறை தியானம்
[illegible]ாலைக்காட்சி நிகழ்ச்சிகள்

[illegible] News Paper RNI No. 47661/87
[illegible] Regn. No. Erode/ 26 /2009-2011
[illegible] Erode HPO on 20/21 of Every Month

[illegible]மிழன் TV ச[illegible] காலை 7:15 மணி

[illegible]மிழன் TV ஞாயிறு[illegible] இரவு 9:30 மணி

[illegible]மிழன் TV திங்கள்[illegible] காலை 6:30 மணி

# வேதாகம
# அஞ்சல் வழிக் கல்வியில்
# ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

**ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**எங்களிடம் ஏற்கனவே அஞ்[illegible] BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்ப[illegible] சேர்ந்து பயன்பெறலாம்.**

[illegible]

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**த.பெ. எண் - 27[illegible]யம் - 638 701.**

**தமிழ்[illegible]யா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.